செல்வக்குமார்



# ஊசல்

ஒரு தேடல்


செல்வக்குமாரின்
கவிதைகள்



அன்புரை

மதகுகள் திறந்தும் அணை மிரட்டும் வெள்ளமாய் உன் அன்பு எல்லா தூய்மைகளாலும் எனக்குள் நீ வாழ்ந்த இடத்தின் வெறுமையை இனி எவராலும் நிரப்ப இயலுமா? எதைத் தொலைத்து விட்டுத் தேடுகையிலும் இனி நீயே அகப்படுவாய்.

கடலின் அதிர்வை நங்கூரமிட்ட கட்டுமரத்தில் படிப்பவர்களைப் போல ஈழ மண்ணின் சூழலை உன்னில் உணர்ந்தேன் நான். மழைக்காலத்தில் நனைந்த அனுபவத்தை பனிக்காலத்தில் தாழ்ந்த மரக்கிளை உலுக்கி ஈடுசெய்ய இயலுமா? செல்வம்.

கவிஞர். அறிவுமதி
சென்னை.



# வாழ்த்துரை

செல்வம் என்கிற நண்பர் செல்வகுமார் பத்திரிகையாளர். பத்தி எழுத்தாளர் என்று பரவலாக அறியப்பட்டாலும் அவருடைய இலக்கியப் பரிமாணமும் இவற்றிற்கு எவ்விதத்திலும் குறைந்ததன்று. செல்வம் ஒரு கவிஞர். தமிழக சஞ்சிகைகளினும் அவர் படைப்புக்கள் வெளியாகி உள்ளன. எனினும் உள்ளூர் ஊடகங்களில் அவர் பங்களிப்புகள் இன்னுமின்னும் இடம் பெற வேண்டும் என்கின்ற நண்பர்களின் வேண்டுதல்களுக்கு ஓரளவில் ஒரு விடையாக வருகிறது. " ஊசல்"

செல்வக்குமார் அவர்களின் உணர்வுகளையும் அவதானிப்புக்களையும் இரத்தினச் சுருக்கமாக பதிவிடும் ஆர்வமும் அர்ப்பணிப்பும் இந்த ஆக்கங்களில் தெளிவுறத் தெரிகின்றன. ஊசிமுனையான, மின்னல் வெட்டான கவிதைகள் இத்தொகுப்பில் நிறையவே உள்ளன. அவ்வப் போது உதித்த இத்தனையும் தொகுத்து இவ்வளவு அக்கறையுடன் வெளியிடுவது செல்வம் அவர்களின் அர்ப்பணிப்புக்கும் ஆர்வத்துக்கும் சான்று அந்த அக்கறையும் அர்ப்பணிப்பும் இன்னும் மென்மேலும் எமக்கான இலக்கியங்களைப் படைக்க வேண்டும் என்கிற அவாவுடன்.

சாந்தன்
சுதுமலை மானிப்பாய்,
யாழ்ப்பாணம்.
29-01-2014



## அன்புரை

அன்புள்ள செல்வம்,

சென்னையில் உன்னைச் சந்தித்த நாட்களிலெல்லாம் சில மணிநேரங்கள் நெஞ்சம் நெகிழ்ச்சியில் உறைந்தது. கடல்போல் அழவேண்டிய துயரங்களையெல்லாம் துடைத்துக் கொண்டு பூத்த உனது சிரிப்பே உனது முகமாக இதயமெங்கும் படர்ந்து பரவுகிறது.

வாழ்க்கையை நசுக்கி உருண்டோடிய முரட்டுப் பாறைகளில் இருந்து உரமெடுத்துப் பூத்தப் பூ அந்தச் சிரிப்பு. நண்பனாக - சகோதரனாக - தோழனாக எனக்குள் நிரம்பித் தளும்பிய உனது உறவு நீ கடல் கடக்கிற-கடந்துவிட்ட நாட்களிலும் அலையெழுப்பிக் கொண்டே இருக்கும். அண்ணன் அறிவுமதியின் தம்பிப் பட்டாளத்தில் அன்பில் கரைந்தவன் நீ. உனது பயணம், வாழ்க்கை, இலட்சியம் எல்லாம் இனியன. இனியவை என்றென்றைக்கும் நினைக்கப்படும்.

மறக்க முடியாத மனசுடன்
கவிஞர் பழனிபாரதி
சென்னை.



# அன்புரை

மறுபடியும் மறுபடியும்
தூக்கி எறியப்பட்டு
அடிபட்ட இதயங்களில்
ஆத்மாவின் கண்ணீராகவும்
இருளின் மீது வரையப்பட்ட
மனம் அப்பிய கவினதத்துளியாகவும்
இருள் உதிர்ந்து போக
காலத்தின் உன்னதமான ஏக்கங்களுக்காக
இழந்த காலங்களை மீட்டெடுக்கும்
நம்பிக்கைகளுடன்
உண்மையின் சாட்சியங்களாக
செல்வத்தின் கவிதைகள் பேசப்படும்.

கவிஞர் டானியல் சௌந்தரன்
நாவாந்துறை வடக்கு.
நாவாந்துறை
09-02-2014



# அணிந்துரை

தமிழ்க் கவிதையின் செல்நெறியைப் புதியதொரு திசையிலே திருப்பி விட்டவன் புதுமைக்கவிஞன் பாரதி. எளிய மொழி நடையில் உள்ளத்து உணர்வுகளை வழியவிடும் வசன கவிதையும் அவன் எழுதினான்.

தமிழில் 'வசனகவிதை' என்ற புதிய இலக்கிய வகையை பாரதி உருவாக்கினான். அதன் மூலம் 'புதுக்கவிதை' என்ற ஓட்டத்திற்கு வித்திட்டான். ஆங்கில மொழிப்புலமை பெற்றிருந்த பாரதி ஆங்கிலக்கவிஞன் வால்ட்விட்மனின் வசன கவிதையை (FREE VERSE) அடியொற்றிக் கவிதைகளை ஆக்கியுள்ளான். இலக்கணமரபின்றி எழுதப்பட்ட பாரதியின் வசன கவிதையமைப்பு, தனிமொழியமைப்பு, உரையாடல் அமைப்பு, நாடக அமைப்பு எனப்பாகுபடுத்திப் பார்க்கலாம்.

குறுங்கவிதை குறுகிய அடிகளில் அமையும் கவிதையாகும். இக் கவிதைகளில் எளிய இனிய சொற்கள் பயன்படுத்தப்படும். நெடுங்கவிதையில் நீண்ட அடிகள் அமையும் பாரதியின் 'காற்று' என்ற கவிதை இதற்கு நல்ல எடுத்துக்காட்டாகும். தனிமொழியமைப்பில் தானே தனியாகப்பேசுவது போலக் கவிதை அமைந்திருக்கும். இருவர் பேசும் முறையில் அமையும் கவிதை உரையாடல் கவிதையாகும். பலர் பங்கேற்று உரையாடும் தன்மையில் அமையும் கவிதை நாடக அமைப்புடையது. இவற்றைவிடப் பொருள் நிலையில் வேதாந்த சிந்தனை, சித்தாத்த சிந்தனை, வாழ்வியல் சிந்தனை என மூன்று வகையாகபாரதியின் வசன கவிதைகளைப் பகுக்கலாம்.

வேதத்தில் இடம் பெற்றுள்ள தெய்வங்களைப் பற்றி பாரதி வசன கவிதை எழுதியுள்ளான். வடமொழிவேதாந்தத்தில் ஈடுபாடு கொண்டது போலவே பாரதி தமிழ்ச் சித்தர்களின் சிந்தனைகளையும் நன்கு கற்றுத் தெளிவு பெற்றிருந்தான். 'சக்தி' என்ற தலைப்பில் பாரதி எழுதிய கவிதைகள் இதற்குச் சான்றாகும்.

வாழ்வியல் சிந்தனை பற்றிய பாரதியின் கவிதைகள் மனிதநேயச்சிந்தனை வாழ்வின் அடித்தளம் ஆக்க விரும்புபவை. வாழ்வு விடுதலையுடையதாய், தளைகள் இன்றி அமையவேண்டும் என்ற பாரதியின் வாழ்வியல் சிந்தனைகளில் தெய்வ நம்பிக்கையும் விதிக்கோட்பாடும் முக்கிய இடம் வகிக்கின்றன. தன்னம்பிக்கையும் துணிவும் கொண்ட வாழ்வியல் ஒன்றிற்கே பாரதி வழி காட்டுகிறான். பாரதியின் வசனகவிதைகளில் தீ, சக்தி, பாம்பு, கயிறு மனம் என்பன குறியீடுகளாய் நின்று பொருளை விளக்கும் தீ என்பது தனிக்குறியீடு. நெருப்பு, அக்கினி கனல், மின்னல், ஞாயிறு, விளக்கு ஆகியவை யாக அது விளக்கப்பட்டுள்ளது. மேலும் பாரதி தான் கூறவந்த பொருளைக் காட்சிப்படுத்தும் நிலையும் சிறப்பானது.

"வெயிலைப் போல் அழகான பதார்த்தம் இல்லை மேகக் குழந்தைகள் மின்னற்பூச் சொரிகின்றன" போன்றவை இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகள். கவிதையின் உணர்ச்சிக் கூர்மையை தேர்ந்த சொற்களால் வாசகன் மனத்தில் வண்ணச்சித்திரமாக அமைத்துக்காட்டுவதில் பாரதி கைதேர்ந்தவன். பாரதியின் இத்தகைய உத்திகளைப் பலர் கையாண்டுள்ளனர். எனவே பாரதியைப் பின்பற்றும் கவிஞர்களை நாம் பிற்காலத்தில் இனம் காணமுடிகிறது அல்லது பின்வந்தோர் கவிதைகளைப் பாரதியின் கவிதை அமைப்புக்களில் பொருத்திப் பார்க்க முடிகிறது. இந்த வகைப்பாட்டில் செல்வத்தின் "ஊசல்" என்னும் கவிதைத் தொகுப்புக்கு அணிந்துரை வரையமுற்படும் போது இரண்டாவது வகைப்பாடே பொருத்தமானது போலத்தெரிகிறது.


எல்லாக்கவிதைகளும் எதையோ சொல்ல நினைத்து வரிகளாய் வந்தமைய இரு கவிதைகளாய்

அமைந்த நிலை எழுதியவரின் தேவையை நன்கு பறை சாற்றுகின்றன.

ஊசல் கவிதைத் தொகுப்பின் பயன்பாடு வசனகவிதையை எழுதுவதற்கு ஒரு உந்துசக்தியாக அமையலாம். அதற்கு முன்னோடியாக செல்வத்தின் முயற்சி உள்ளது.

"கலாநிதி" மனோன்மணி சண்முகதாஸ்

யாழ்ப்பாணம்.



ஊசல் ஒரு தேடல்
சில எண்ணங்கள்.

# முன்னுரை

ஊசல்-ஒருதேடல் ஜனனத்திற்கும் மரணத்திற்குமிடையே
ஊசலாடிக்கொண்டிருக்கிறது மனித வாழ்வு.
இன்பத்திற்கும் துன்பத்திற்குமிடையில்...
இயல்புக்கும் இயல்பின்மைக்குமிடையில்...
அரவணைப்புக்கும் புறக்கணிப்புக்குமிடையில்...
அமைதிக்கும் அகங்காரத்துக்குமிடையில்...
வெற்றிக்கும் தோல்விக்குமிடையில்...
விருப்புக்கும் வெறுப்புக்குமிடையில்...

இப்படி எத்தனையோ முரண்பாடுகளுக்கிடையில் அன்றாட நாட்கள் ஊசலாடி.. ஊசலாடிக் கழிகின்றது. மனிதனுக்கு மட்டுமல்ல சகல ஜீவராசிகளுக்கும் வாழ்க்கை என்பது ஊசலாட்டம் தான்... நிரந்தரமான நிலையானதல்ல என்பதே பிரபஞ்ச விதியாகிவிட்டது. இந்த ஊசலாட்டத்திற்கிடையே தான் வாழ்வின் அத்தனை வினோதங்களும் நிகழ்ந்தேறி முடிகின்றன. இதுவே வியத்தகு அதிசயம்.

இப்படியேயான வாழ்வின் தேடல்கள் யாவும் முடிவிலியான தொடர்நிகழ்வாக இருப்பதே வாழ்க்கை சுற்றோட்டத்தின் சுவாரஷ்யமான இயக்கமாகும். விதிக்கப்பட்ட எல்லைகளுக்கு இடையேயான ஊசலாட்டம் என்று-எக்கணத்தில் நிற்கிறதோ அதுவே ஒரு தனி மனித வாழ்வின் ஒய்வு நிலையாகி விடுகிறது. இது மனிதத்தின் ஒய்வு நிலையாக அர்த்தப்படாது.
"எழுதிச் செல்லும் விதியின் கை எழுதி எழுதி மேற்செல்லும்..."என்ற பாரசீகக்கவிஞன் 'ஓமர் கையாமின் " வார்த்தைகள் இந்த ஊசலின் தத்துவார்த்த விளக்கமாக இருப்பதாகவே படுகிறது. ஊசல் அனுபவம் ஊஞ்சலாட்ட அனுபவ மகிழ்வாக எல்லோரும் உணர்வார்களேயாயின் அது ஒரு சந்தோஷமே...

செல்வக்குமாரின் வரிகள் அவரை எழுதவைத்த உணர்வின் அழுத்தத்தை படிப்போருக்கு ஏற்படுத்துகிற வலிகளால் பெரும்பாலும் உணரமுடியும்

"முகம் இருந்தும்
முகவரி இல்லாத
எம்மை
முகவரி இருந்தும்
முகம் இல்லாதவர்கள்
பார்த்துப் போகிறார்கள்"

நெஞ்சில் எங்கோ சுருக்கென குத்துவது போன்ற வலி ஏற்பட வில்லையா? இந்த வரிகள் ஏற்படுத்தும் இதயக் கனம் அதிகமில்லையா?

"மண் பெற்ற
தாயின் மடிசாய்கின்றோம்
தாயின் மூச்சு
மண்ணின் சுவாசம்
நுகர்கின்றோம்"

இந்த வரிகளினூடாக உணர்த்தும் தாய் மண் இதயத்தின் உயிர்த்துடிப்பின் 'ஊசல்" புரிகிறதல்லவா இப்படி எத்தனையோ வரிகள் மனதை வருடவும் நெருடவும் செய்கின்றன.

அதே வேளை சில வேளைகளில் வார்த்தைகளுள் பிடிபடாத உணர்வுகள் வரிகளாகி பிரசவமாகும் போது எங்கோ ஏதோ ஒன்று ஒழிந்து கொண்டு " கண்ணாமூச்சி காட்டித் துடிப்பதும் தெரியவே செய்கிறது.

புரிந்தும் புரியாமலும், தெரிந்தும் தெரியாமலும் , அறிந்தும் அறியாமலும் கவிஞரின் வார்த்தைகள் அவரது உள்ளுணர்வின் அதிர்வுகள் இழையோடுகையில் வாசிப்போரின் மனதிலும் மீளதிர்வை ஏற்படுத்தவே செய்கிறது.

விரும்பியோ விரும்பாமலோ இந்த ஊசலாட்டத்தேடல் எல்லோருக்கும் எல்லாவற்றிற்கும் தவிர்க்கவே முடியாத பட்டறிவு அனுபவத்தேடலாகவே அமைகிறது. 'ஊசல்' என்ற வரையறைக்குட்பட்ட வாழ்வோட்டம் எத்தனை அதிர்வுகளை ஏற்படுத்தி காலத்தை கடக்க வைக்கிறது? நினைத்தால் பிரமிப்பு இல்லாவிட்டால் அதுவே பிரபஞ்ச இயக்கமாகிறது.... பிரபஞ்ச ரகசியமும் ஆகிறது.

இங்கு கவிஞர் செல்வக்குமார் தனது வாழ்வியல் "ஊசல்" அனுபவத் தேடலில் சிக்கிய வார்த்தைகளை கவிதை வரிகளாக்கி பதிவு செய்துள்ளார்.அவை அவரது தேடல் அனுபவ உணர்வுகளின் அதிர்வு வெளிப்பாடக உள்ளதால்- அந்த அதிர்வுகள் உள்ளடக்கிய தாக இருப்பதே முக்கிய விடயம். தலைப்பிடாத கவிதைகள் என்பதாலேயே ஊசல் தேடல் வரையறையற்று வரிகளாக தொடர்வது புதிய அனுபவமே.

"எனது எதிர்பார்ப்பில்
எதனை எதனையெல்லாம்
எதிர்பார்க்காமல்
நடந்து விடுகிற நிகழ்வுகளுக்குள்
பெருத்து வீங்கிவிடுகிற
காற்றுப்பையாக
ஊதும் மட்டும் சம்பவங்கள்
பல இருக்கின்றன"

என ஒப்புதல் வாக்குமூலம் அளிப்பது போன்று கவிஞர் எழுதியுள்ள வரிகள் இத்தொகுப்பின் சகல வரிகளுக்கும் வரைவிலக்கணமாக உள்ளதெனலாம். சில வரிகள் கனவுலகில் மிதக்க வைக்கிறது. சில வரிகள் இதயத்தை கனக்க வைக்கிறது. சில வரிகள் ரணமாக்கி இரத்தத்தை கசிய வைக்கிறது. சில வரிகள் 'வலி'யாகி வேதனைப்படுத்துகிறது. சில வரிகள் சினமூட்டி சிலிர்க்க வைக்கிறது. ஒரு கவிஞனின் ஆத்மாவின் ராகங்கள் அடுத்தவனின் இதயத்திலும் அதே உணர்வை மீட்டாவிடில் அதில் உயிர்ப்பேது ? உண்மை ஏது?

இலக்கணம் மீறிய கவிதைகளின் வரிகள் இலக்கியமாகும் தருணமே இதுதான். ஒரு மனிதனுள் உறைந்து கிடக்கும் கவிஞன் வெளிப்படும் தருணமும் இதுவேதான். இலக்கண மீறல்கள் இலக்கியத்தை நவீனப்படுத்துமெனின் அந்த மொழி புதிய எல்லைகளை நோக்கிய பயணத்தில் உள்ளது என்பதே அர்த்தமாகும்.
ஊசல் ஒரு தேடல் தொகுப்பில் கவிஞர் செல்வக்குமார் இத்தகையதோர் பயணத்தை மேற்கொள்ளும் முயற்சியையே மேற்கொண்டுள்ளார் எனக் கருதமுடியும்.

பொதுவாகவே நவீன தமிழ்க் கவிதைகள் குறித்தும் கவிஞர்கள் குறித்தும் படைப்பிலக்கியவாதிகள் விமர்சகர்கள் மற்றும் வாசகர்கள் மத்தியில் பல்வேறு வகையான கருத்தியல் சார்ந்த விமர்சனங்கள் இருந்து வருகின்ற இவ்வேளையில் தான் கவிதை தொகுப்புக்களின் வரவுகளும் அதிகரித்து வரும் நிலையும் உள்ளது.

இந்தக் காலத்திலேயே கவிஞர் செல்வக்குமாரின் ஊசல் ஒரு தேடல் தொகுப்பு உங்கள் கரங்களுக்கு வந்துள்ளது. காலத்தையும், மக்களையும் விடவும் மிகவும் சக்திவாய்ந்த மதிப்பீட்டு மையங்கள் வேறெதுவுமில்லை. இந்த இரண்டு மையங்களுமே வரலாற்றின் போக்கில் நின்று நிலைக்கக்கூடிய படைப்புக்களை தாங்கிக் கொள்ளும் திறன் கொண்டவையாகும். எனவே-காலமும் மக்களும் செல்வக்குமாரின் கவிதைகளுக்கான சங்கப் பலகையாக இருக்கும் என நம்புகின்றேன்.

அன்புடனும் வாழ்த்துக்களுடனும்

ராதேயன்
14.01.2014
யாழ்ப்பாணம்.



## என்னுரை

வாழ்வின் காலவோட்டத்தில் பார்த்த, அறிந்த, தொட்டு உணர்ந்த நிகழ்வுகளை இயல்பான நதியின் சலசலப்பில்லா ஓட்டத்தைப் போல ஓட விட்டிருக்கிறேன். இதற்குள் அகப்பட்டு மீள முடியாமல் சேர்ந்து ஓடுவது போல உணரவிட்டிருக்கிறேன்.

மழைக்கால முற்றத்து வெள்ளத்தில் கடதாசி கப்பல் செய்து ஓடவிட்டு திண்ணையில் இருந்து ரசிப்பதுபோல உட்கார விட்டிருக்கிறேன். மழையில் நனையாமலும் நனைந்தது போலவும் மனம் ஈரப்பட்டு உலர்த்திக் கொள்ளும் உணர்வுகளை ஏற்படுத்திக் கொடுக்க எனது முதல் தொகுப்பான "ஊசல்" கவிதைத் தொகுப்பினை உங்கள் கைகளில் கொடுத்திருக்கிறேன். புரட்டிப் படியுங்கள். ஏதாவதொரு பக்கம் கண்டிப்பாக உங்கள் வாழ்வினை அறியப்படுத்தும்.

சென்னையில் இருந்த காலப்பகுதியில் கவிஞர் அறிவுமதி யின் செயலாளராக பணியாற்ற வாய்ப்புக் கிடைத்தது. அந்தக் காலப் பகுதியில் பாலர் வகுப்பில் "அ" னா எழுதப் பழகியது போல் கவிதை எழுதப் பழகினேன்.

யாழ்ப்பாணத்தில் வெளிவந்த "நமது ஈழநாடு" பத்திரிகையில் என்னை இலக்கிய ஆசிரியராக தெரிவுசெய்த பிரதம ஆசிரியர் ராதேயன் அவர்களுடனான ஈடுபாடும் என்னைத் தொடர்ந்து கவிதை எழுதத் தூண்டியது.

பக்கங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொருவரின் நிகழ்வுகளாக இன்பமோ, துன்பமோ, அனுபவிக்கக்கூடியதாகவும் இருக்கிறது.

பழியார் என்று யார் சொல்லினும் வழி யார் வந்ததென கவிதை எழுதியிருக்கின்றேன். பாட்டு எழுத வாய்ப்புக் கேட்கவில்லை அதன் பொருள் உணர்ந்து எம்மை யார் என்று காட்டுங்கள் என்று கவிதை எழுதியிருக்கின்றேன். எமது மண், எமது மொழி எமது வாழ்க்கை வலியை இடைக்கிடை வெளிப்படுத்தி இருக்கின்றேன். முழுமையாக வெளிப்படுத்தாததற்கு வருந்துகின்றேன். வெளிப் படுத்தினால் என்ன நடக்கும் என்று உங்களுக்குத் தெரியும்.

காதலுடன் வேலி போடவிடாது வெட்டி விட்டிருக்கின்றேன். படித்துப் பாருங்கள் மேலும் மேலும் எதைத்தான் நான் எழுத வேண்டும் என்று சொல்லுங்கள். எனது பக்கங்களை வைத்து எனது புத்தகம் நன்றாக இருக்கிறது என்று மட்டும் சொல்லி விடாதீர்கள். கவிஞர் பாரதியிடமும் பாரதிதாசனிடமும் வாழ்வைக் கண்டேன், கவிஞர் காசிஆனந்தனிடம் உணர்ச்சி கண்டேன், கவிஞர் புதுவை இரத்தினதுரையிடம் நேர் மார்பு கண்டேன், கவிஞர் அறிவுமதியிடம் உண்மை கண்டேன், கவிஞர் கண்ணதாசன், கவிஞர் வைரமுத்து, கவிஞர் பழனி பாரதி, கவிஞர் நா.முத்துக்குமார், கவிஞர் யுகபாரதி, கவிஞர் தாமரை போன்ற பல கவிஞர்களிடம் திரையிசைப் பாடலைக் கண்டேன்.

ஊசல் புத்தகத்தை படித்து என்னிடம் நீங்கள் என்னத்தைக் காண்பீர்கள் சொல்லுங்கள். அதற்கேற்ப கவிதை எழுதிவிடுகிறேன் கவிதை எழுதுவதுடன் நின்று விடாது அந்த வரிகள் போல் வாழ வேண்டும் என்று கவிஞர் காசி ஆனந்தன் சொன்னார் நானோ அந்தப் பாதையில் சென்று, வாழ்ந்து கொண்டு கவிதை எழுத ஆரம்பித்திருக்கின்றேன்.

செல்வக்குமார்
நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.




| | | |
|---|---|---|
| தலைப்பு | - | ஊசல் ஒரு தேடல் |
| விடயம் | - | கவிதைகள் |
| ஆசிரியர் | - | செல்வக்குமார் |
| பதிப்புரிமை | - | ஆசிரியருக்கே |
| பக்கங்கள் | - | 140 |
| ஆண்டு | - | 2014 |
| அச்சகம் | - | நோபிள் பிறிண்டேர்ஸ், |
| | | 817, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் |
| வடிவமைப்பு | - | தீபன் |
| வெளியீடு | - | பிறை வெளியீடு |
| வெளியீட்டாளர் | - | வாமதேவா தியாகேந்திரன் |
| விலை | - | 500/- |

இந்நூல்...
உலகெங்கும்
மானுட விடுதலைக்காக
போராடி
விதையான
பூமி புத்திரர்களுக்கு...




உண்மையான விடுதலை
தூய காதலில் பிறக்கிறது
ஏனெனில்
காதல்
கட்டுத்தளைகளை
விரும்புவதில்லை.



நெருக்கங்களின்
உணர்வுகளில்
பகிரப்படுகின்ற உறவுகள்
வெவ்வேறு ஊடகம் கொண்டு
எத்தகைய வலிமையானதாக
இருப்பினும்
அவரவர் தமக்குள் உட்படுத்தும்
செயற்பாடுகளின் வித்தியாசத்தில்
கட்டியெழுப்பப்படுகின்றது
வாழ்வு!





தலையாட்ட கையசைக்க
ஒரு நாள் பூசையில்
அலங்கரித்த நிகழ்வில்
கொலு பொம்மைகள் பேசுமா?
ஒன்றின் பின் ஒன்றாக
அடுக்கிவிட்ட பொம்மைகள்
ஒரே மாதிரி இருக்குமா?
அன்றைய ஒருநாள்
நிகழ்வுக்கு
ஒன்றுகூடிய பொம்மைகள்
அடுத்த நாளே
எந்த மூலையில்
தூசுபட்டு தேடப்படாமல்
அடுத்த நிகழ்வுக்காக
காத்திருக்கப் போகிறதோ?



கரித்துண்டால்
கிறுக்கி இருக்கும்
வீதியோர
வெள்ளை மதில்கள்
ஒருநாள்
பெயர் சொல்லும்.
கட்டுண்ட
இடத்தில் இருந்து
பட்டுணர்ந்த இடம் வரை
ஊசல் போல
ஆடிக்கொண்டிருக்கிற
உணர்வலைகள்
உடலைத் தீண்டுகிறது.

ஆழம் தெரியாத கடலில்
நங்கூரம்
இடமுடியாதபோதும்
கைவிட்டதில்லை.
ஆழம் தெரிந்த கரையில்
நங்கூரம் இட்டு இருந்தும்
கைவிட்டாயே.
அருகில் நின்றும் வாழ முடியாத
படகும் கடலும்
விட்டுப் பிரிய மனமில்லாத
கரையோர வாழ்விடங்களும்
இனியும் வாழும்.
எங்கள் பாதம் பட்டு
அடிக்கடி மறையும் கரைக்கு
உன் பாதம் பட்டு
மறைக்க முடியாத போதும்
நாம் வாழ்வோம்.





பார்வையாளன்
என்னை
அடையாளம் காட்டாதே.
நீண்ட வரிசையில்
எனக்கான
எதிர்பார்ப்பு
இருக்கிறபோது
என்னைப் படம் பிடிக்காதே.


பொருள்களை ஏற்றி
நான்குசக்கர வண்டி
போல்
நகர்ந்து வரும்
மிதிவண்டிகள்.
அடி எடுத்து வைக்கும்
மக்கள் கூட்டத்தின்
மத்தியிலும்
இடமெடுத்து உருட்டினோம்.

களைப்படைந்து
ஒதுங்கிய கூட்டம்
ஒரு பக்கம்.
கால் தவறி மிதிவண்டியோடு
விழுந்து எழும்ப முடியாமல்
கிடந்தபோதும் கூட
மிதிவண்டிச் சில்லு
சுற்றுவது நிற்கவில்லை.






பார்வைப் படலம்
நிறைய
தீட்டி இருக்கும்
சிவப்பு நிற தூரிகை
உயிராக கசிந்து
உணர்வுகள்
வழியும்.
ஊறுகிறது இரத்தம்
எப்பொழுதுதான்
காயும்?




கரை சேர்ந்த கடலும்
துடுப்பு சேர்ந்த படகும்
வலைகளுக்குள்
பிடிபடும் மீனும்
தொடாமல் தொட்ட
நங்கூரமும்
என்றும் தொட்ட வாழ்வில்
நீ வந்து அழிவுகளை
ஏற்படுத்திப் போயினும்
விடுபடாமல் வாழும்.

பல ஆயிரம்
படைகளின்
கட்டுப்பாட்டில்
அரங்கேறுகிற
நிகழ்வுகளில்
இருந்து
தெரிகிறது
எமது பலம்
அதிகமாகியதும்
எமது களம்
பலமாகியதும்.




என்னை
போர்வை விலக்கி
எழுப்பிவிட்டிருக்கிற
குளிரைப் போலும்
பாதி கலைந்ததான நித்திரையைப் போல்
எனது கண்ணாடியில்
எனது முகம்
சரியாகத் தெரியவில்லை.
ஏதோ ஒரு தவறு இருப்பதாக
மீண்டும் மீண்டும்
சரி செய்ய
மறுபடியும் மறுபடியும்
எல்லா முகங்களையும்
திரும்பிப் பார்க்க வைக்கிறது.






**பொ**றுக்கி
எடுக்க முடியாது
சிதைவுகளாகும்
உடலை
எத்தனை தடவைகள்
அதே இடத்தில்
புதைக்க முடியும்.
புதைத்த இடங்களை
மறைத்து
இன்னும்
எத்தனை தடவைகள்
சிதைவுகளாக்க முடியும்.



தனிமைப்பட்டு
எவரையும் அறிமுகப்படுத்தாமல்
ஒருமித்து
எல்லோரையும் தெரியப்படுத்தியும்
நீயும் நானும்
விலகிச் செல்கிறோம்.



பயன்பட்டுக் கழிபடும்
பொருள்கள் போல
என்னையும் விட்டுவிட்டாய்.
அன்றிலிருந்து
எதனையும்
பெறுமதியாகப்
பார்க்கமுடியவில்லை.




அடிக்கடி
நனைக்கும் வாய்க்காலின்
தண்ணீர்
ஒற்றைச் சேலைத் தலைப்பின்
சலசலப்பு
என்றுமே
சூடாக்கியது கிடையாது.
மனம் பார்த்த வார்த்தைகளுக்குள்
வியர்வை அமிழ்ந்துபோகும்.
சுகநலம் பகிர்ந்து கொண்டதும்
மிச்சமாக ஒன்றுமேயில்லாதது போல்
வெறுமையுடன் முகம் பார்த்து
புன்னகை மேவிட
வாழாதவர்கள் இங்கில்லை.



உனக்குப் பிடிக்கவில்லை
என்ற காரணத்தால்
எதனை எதனையெல்லாமோ
இழந்தேன்!
உனக்குப் பிடித்திருக்கின்றது
என்ற காரணத்தால்
எதனை எதனையெல்லாம்
பெற்றேன்.

விட்டுக் கொடுத்து
வந்தவர்களை வரவேற்று
கைக்கெட்டிய தூரம்
வரை
வழியனுப்பிவிட்டு
வந்தபோதும் கூட
மீண்டும் ஒரு தடவை
திரும்பிப் பார்த்து
உறுதி செய்து
நிறைவு பெறுகிறது






உன்னை சந்திக்கும்
சில நிமிடத்துக்காக
வீணாக நாள்கள்
கூடியது.
எப்பத்தான்
நாங்கள் கூடுறது?




நிகழ்வுகளில் இரு விளைவுகள்
இருப்பதுபோல
இலகுபடுத்தும் செயற்பாடுகளில்
கூடுதலாக
முழுமையடையாமல்
எம்மை
விடுவித்துக் கொள்வதும்
தெரியாமல்
அகப்பட்டுக்கொண்டு
சிறைப்பிடிக்கப்பட்ட
நினைவுகளில்
கைதுகளைப் பற்றிப்
பேசுகிறோம்.
இங்கே
யார் வேண்டுமானாலும்
கைதாகலாம்.

நண்பர்கள்
சண்டைபிடித்தால்
மறுகணமே
சேர்ந்துவிடுவார்கள்.
காதலர்கள்
சண்டைபிடித்தால்
மறுஜென்மமும்
சேரமுடியாது.





பூட்டி இருக்கின்ற வரை
வெளியே வந்துவிடத் துடிக்கும்
எதற்கும்போல்
கடலுக்கும் இருந்ததில்லை.
வலையினை
கடலில் வீசி
இழுக்கின்றபோது
நாமும் விட்டுக்கொடுக்கவில்லை.
கடல் அலை வீசி
தரையில் இழுக்கின்ற போது
நீயும்
விட்டுக்கொடுக்கவில்லை.




அழுக்கினை
நீக்கிய தண்ணீராக
துயரைக் கொடுக்காது
சக்தியைக் கொடுத்து
வழிகிறது வியர்வை.
வீட்டுக்குள் முடங்கி
புழுங்கி அவியும்
சோம்பேறிகளின்
உடலையும் விட்டு
விலகி பெருமையடையும்.



வேரோடு பழகி
உதிர்ந்த பூக்களிடம்
நட்புக் கொண்டு
வானத்து முகிலை வடித்த
மழைபோல்
மண் மணத்துடன்
தெளிந்து நனைகிறது.
வெட்டவெளியில்
மணல் மேற்பரப்பில்
அலைந்து
ஆறுதலடைய
நிழல் இல்லாமல்
தனக்குத்தானே
வேர்வையில் குளிர்காய்ந்தும்
தவித்துக்கொண்டிருக்கிறது
தாகம் இல்லாமல்.



சாத்திரியிடம்
அடிக்கடி
வாழ்க்கைப் பலன் கேட்டு
தெய்வங்களுக்கு
அர்ச்சனை செய்தும்
முடியாத காரியம்.



நிறையப்பேரை
விலக்கிக்கொள்ளமுடியாமலும்
ஒரு சிலருடன்
சேர்ந்துபோக முடியாமலும்
இருக்கிற போதுதான்
எந்த இடமும் பயன்படுகிறது
வசதிகள்
எம்மை சூழ்ந்தாலும்
ரசனையுள்ள இநத வாழ்வில
ஆரம்ப நடைப்பயணம் தான்
எம்மை தக்க வைக்கிறது.




ஒன்றாகி நின்ற
சந்திகள்
பேருந்துகளில் மட்டுமல்ல
ஓடி ஓடி ஏறிய பயணங்களில்
வாசலில்
உருவான காதல்.



ஒரு நாளாவது விட்டதில்லை
தூசு பிடித்திருக்கும்
சுவரில்
தொங்கும் குடும்பப் படங்கள்.
வளர்க்கவில்லை
புற்கள் வளர்ந்திருக்கும்
வளர்த்த மரங்கள்
வாடி நிற்கும்.
நான் படித்த அறையில்
பேனாக்களும் வெற்றுத்தாள்களும்
எதை எழுத
காத்துக்கிடக்கிறது.
போய்விட்டு வருகிறோம்
என்று சொல்லவில்லை
திரும்பிப் பார்த்துவிட்டு
வந்தோம்.
எமது வீட்டினை



காவியமான
சிந்தனை
பொறுமைக்குள்
மூழ்கி
மீளமுடியாமல்
அவதிப்படும்.
நடைமுறை
நிகழ்வுகளில் நிழல்
முடியவில்லை
பிரிக்க.



நீளமான ஆழக்கடலும்
முடிவில்லா வானமும்
பகிர்ந்து கொள்ளும்
கண்ணாடி வெளியில்
இருள் வந்து ஒளிவரும்
நிலவின் ஆதிக்கத்தில்
எனது வானம்
வெளிப்பட்டுக் கொண்டது.
அதிகாலை, மாலை நேரத்துக்கு
காத்திருந்தது போல்
எனது கண்கள்
விழித்துக்கொண்டே இருக்கிறது.



தன் வசப்படுத்திக் கொண்டதாக
தமிழ் உலகம் இல்லை
தம்மை
வசப்படுத்திக் கொண்டவனுக்காக
தமிழ் உலகம் உண்டு
அடைக்கப்பட்டதாக
விடுவிக்கக் கோரும்
போது
விடுவிக்கப்பட்டவனை
அடைக்கக்கூடாது.




உன்னை
தவிர்த்துக்கொள்ள முடியாதவர்களுக்கு
நனையத்தான் பிடிக்கிறது.
பள்ளம் உள்ள நிலங்கள்
தாங்கிக்கொண்டு
மழை நின்றும் காயாமல்
பல நாள்கள் காத்துக்கிடக்கின்றன.




இடப்பெயர்வில்
கொட்டோ கொட்டென்று
கொட்டிய மழையில்
நனைந்தது தெரியாமல் நடந்தோம்.
ஒவ்வொரு அடியும் அழுதது தெரியாமல்
முகத்தை நனைத்து
கழுவி விட்டுக்கொண்டும்
ஒதுங்க இடமில்லாமல் இருந்தபோதும்
மழையில் தாகம் தீர்த்து
களைப்பில்லாமல்
இடம்பெயர உதவிய மழையே
அன்று வற்றிப்போன வானத்தில்
இன்றும் விடியல் இல்லை.



எமது வீடு முற்றம்
நினைவுகளில் வந்து
கோடு போடும்.
விட்டோடிப் போகும்போது
தேடி வைத்த அனைத்தும்
தொலைந்து போனதே
இலட்சக்கணக்கான
உயிர்களை காவு கொண்ட
தமிழ் மண்ணின் பெறுமதி
தெரியவில்லையா?
பெறுமதிக்காக தமிழ் மண்
இன்னும்
எத்தனை உயிர்களை
எடுத்தாலும் பரவாயில்லை...



உடல் கசிதல்
தலையில் இருந்து கால்வரை
தோய்தல்.
ஈரப்படுத்தும் புத்துணர்ச்சி
ஏழையின் முயற்சி
கூடுதலான
வியர்வைத் துளிகள்.
வீணாகிப் போவதில்லை
துளி ஒவ்வொன்றும்
உறைகிறது.




வானவேடிக்கையில்
பண்டிகைத் திருநாளில்
இரவின் ஒளியாக
கண்ணிலனை மறைத்து
விடிய முன்னர்
போய்விடும் வெளிச்சமல்ல.
இரத்தக் கீறல்களுடன்
பயப்படுத்தி
உலர்ந்த நாக்கில்
ஊறிய எச்சிலில்
ததும்பி நிற்க
பேசமுடியாமல் போனது.




மூன்று தசாப்த காலம்
என்னை இயக்க வைத்துள்ளார்கள்.
இதனால்
மக்களிடமிருந்து
கூடுதலான பழி சுமந்து
நிற்கிறேன்.
கொலைகளை நிறுத்து
என்று நான் சொல்லமாட்டேன்.
நீங்கள் சொல்லுங்கள்
எனக்கு ஆறுதலைத் தாருங்கள்.

**வி**ளையாட்டாக விளையாடி
வானில் பறக்கும்
அழகான கிளியே
உனக்கும்
சிறைவாழ்வுண்டு.
மாங்காய் மரத்துடன்
பச்சைப் பசேலுடன்
ஒட்டியிருக்கும்
பச்சைக் கிளியே
ஒளிந்துவிட்டேன்
என எண்ணாதே.
மறந்து விடாதே
சொண்டின் சிவப்பு நிறம்
காட்டிக் கொடுக்கிறது.






என்னை
மார்பில் தூக்கியவனுக்கு
மனித நேயம்
பொறுமை
இருக்கவேண்டும்.
இரும்பால்தான்
என்னை செய்தார்கள்
ஆனால்
உனது கரம்பட்டு
உனது மனம் இரும்பானதைப்
பார்த்து உருகுகிறேன்.



கொண்டு வரவும்
கொண்டு போகவும்தான்
அலை.
நிறுத்தவும் முடியாது
அமைதியாக
இருக்கவும் முடியாது
அதற்கேற்ப ஓடிக்கொண்டிருக்கிறது
வந்த வேகத்தில் கீழே சென்று
ஏதோ பேசிவிட்டு
கிளறிவிடும் சுழியோட்டம்
சேர்ந்திருந்ததால்தான்.



எவ்வளவுக்கு எவ்வளவு
கூடுதலாக
அப்பாவிகள் அடிவாங்குகிற
போதுதான் தெரிகிறது
பாதுகாப்பை
படை தேடுகிறது
என்பது.




தொடராமல் இருக்க
காவலாளர்களும்
மாறி மாறி காவலில் நிற்க
கிளிக் கூட்டங்களும்
விட்டபாடில்லை.
களவு செய்து பிழைக்கும்
கிளிக் கூட்டத்துக்கு
தெரியவில்லை
களவுதான் என்று.



வெயிலின் சூடு
உழைப்பின் கனம்
உடலை விட்டு வெளியேறும்
வியர்வைத் துளிகளை
கூடுதலாக
எதிர்பார்த்து எதிர்பார்த்து
இன்னும்
களைப்படையாத உடல்
சுமை வியர்வையில் தெரிவதில்லை.
வியர்வை
சுமையை என்றைக்குமே
கொடுத்ததில்லை.




பயணிக்கப் பிடிக்கின்ற
போதுதான்
விபத்து ஏற்பட்டாலும்
கூட்டம் அதிகமாக இருக்கும்.
பரந்துபட்ட
மனப்பாங்குடன்
எல்லோரையும் அனுமதித்து
பயணிக்க விட்டு
புகழ்பேசுகின்ற வாழ்க்கையில்
புதியவர்கள்
வருகின்றபோதும்
பாதை மாறாமல்
இருந்துவிடுகின்றதனால்
எங்களை
மாற்றிக்கொள்ள முடியவில்லை.



பிடிக்காததொன்று
அடிக்கடி
பார்வைக்குள் அகப்படுமாயின்
எல்லோருக்கும்
பிடித்துப்போய் விடுகிறது.
அதேபோல்தான்
உனக்கு முன்னால்
நான்.

குளங்களாகவும் ஆறாகவும்
மாற்றியமைக்கின்ற வடிவங்களில்
மழை
தன்னை மாற்றிக் கொள்ள
முடியாதது போல்
எனது கண்ணாடித் தோப்பும்
மாறவில்லை.





பக்கத்து வீட்டுப் பையன்
நல்லவன்
என்றைக்குமே உனக்குப்
பாதுகாப்பாக இருப்பான்
என்று உன்னிடம்
என்னைப் பற்றிச் சொன்ன
உனது தாயிடம்
கடைசிவரை
உனக்குப் பாதுகாப்பாக
இருப்பேன் என்று
நான் எப்படிச் சொல்ல?




மனதுக்குள் வேர்க்கும்
ஆனாலும் உடல் நடுங்கும்.
கார்த்திகை மாதத்தில் தான்
உன் இஷ்டப்படி வந்து
போகிறாய்.
எமக்கு பிடிக்கிறதோ
பிடிக்கவில்லையோ
அதையெல்லாம்
நினைக்கும்
மனநிலை
உனக்கு இருக்கப்
போவதில்லை.



பார்க்கிறவர்கள் எல்லோருக்கும்
பிடிக்கும்படி
ஒருவரை ஒருவர் தேடிப் பார்த்தால்
என்றைக்குமே
எவரையும் பார்க்கமுடியாமல்
போய்விடும்
என்பது தெரியாமலா
உன்னை விரும்பும் என்னிடம்
பார்க்கிறவர்களுக்குப்
பிடிக்காது என்றாய்.



தேடாத நாள்களில்
நீ வருகின்றபோது
பிடிக்காததொன்றாகவும்,
தேடின நாள்களில்
நீ வர மறுக்கின்றபோது
பிடிக்கும் ஒன்றாகவும்
இருக்கிறாய்.
எப்பொழுது
எங்களுக்குப் பிடிக்கும்படி
நீ செயற்படப் போகிறாய்.



வீட்டுக்கு வந்த
ஒருவரை
வாசலில் வழியனுப்பிக் கொண்டிருந்தபோது
அந்த வழியே நானும் வந்தேன்.
என்னை வரவேற்கிறாயா?
அல்லது
வழியனுப்புகின்றாயா?



நீ செல்லும் இடமெல்லாம்
என்னை உன்னிடம்
இழுத்துக்கொண்டு போகும்
எனது இதயம்.
நான் செல்லும் இடமெல்லாம்
உன்னை என்னிடம்
இழுத்துக்கொண்டு
வரமுடியாமல் இருக்கிறதே?



உன்னை எனக்குப்
பிடித்திருக்கின்றதென்று
உன்னைத் தவிர
எல்லோருக்கும் சொல்லியிருக்கிறேன்.
என்னை உனக்குப்
பிடித்திருக்கின்றது என்று
எல்லோருக்கும்
சொல்லாவிட்டாலும்
பரவாயில்லை
எனக்குமட்டும்
சொல்லிவிடேன்.



மழை பெய்யும்போது
பெரிய மழை என்று தெரியாமல்
ஓடும் வெள்ளத்தைப் பார்த்து
கூடுதலாகப் பெய்திருக்கிறது என்று
அறிந்து கொள்ளும் போதுதான்
தெரிகிறது
பரந்து பெய்கிறது மழை என்று.
உன்னைப் புயல், வெள்ளம்
பெரும் மழை, தூரல் மழை என்று
பல வடிவங்களில் அடையாளப்படுத்தும்
திறமை
உனக்கு மட்டும் இருக்கிறது.



விழித்திருக்கும்
கண்களைக் கட்டி
செயற்படுவதான வரிசையில்
எல்லோரும்
நிற்கிறார்கள்.
இதற்குள் தான்
முதல் ஆள் என்று
வேறுபாடும் பார்க்கிறார்கள்!



விருப்பத்துடனோ விருப்பமில்லாமலோ
காய்ந்துகொண்ட நிலம்
மழையை எதிர்பார்க்கின்றபோது
விருப்பம் இல்லாமல் போய்விடாது.
எல்லோரையும் நனைக்கும்
மழைக்கு வித்தியாசம் தெரியவில்லை.
மழையில் நனையும் எல்லோருக்கும்
முழுமையாக நனையத் தெரியவில்லை.



இங்கு வேலிகள் இல்லை
வரம்பு மீறி மேயாத
ஆடுகளும் மாடுகளும்
கூண்டுக்குள் தானாக அடைபடும்
கோழிகளும் வாழ்கின்றன.
வானம் பார்த்து பிரமிப்பில்லாமல்
தூரம் பார்த்து களைத்துவிடாமல்
அயராது உழைத்தும்
சின்னக் கொட்டிலுக்குள்
இவர்கள் வாழ்வு
ஆயுள் பெறுகிறது.
கூட்டமாக பறந்து திரியும்
பறவைகளும்
ஒரே மரத்தின்மேல்
தங்கி விடுவதும்
ஒன்றாக இரை தேடுவதுமாக
இருக்கிற
இந்த ஊர் மட்டும்
நகர வாழ்வுடன்
ஒத்துப்போக முடியவில்லை.




நல்லூர்த் திருவிழாவில
அங்கப் பிரதட்சுஷிணை
செய்துவிட்டு
தேர் முட்டியில் நண்பர்களுடன்
அமர்ந்திருந்தபோது
எனது அருகே வந்து
கண்டிப்பாக
உனது காதலி
கிடைப்பாள் என்றாய்.
உனது காதலன்
நான் என்று
அறிந்தா?
அறியாமலா?




தூர இருந்தாலும்
என்னருகில்
அவள் இருப்பதாக
நினைத்துக்கொண்டு
எங்கும் பயணிக்கிறேன்.
பக்கத்தில் இருந்தாள்
எங்கும் பயணிக்க
முடியாமல் இருக்கிறது.

எமது வீட்டு முற்றம்
அலையேறி விளையாடும்,
அதில்
வெண்பரப்பு புழுதி மண்
அழகாகப் பரவி வரும்,
கோலம் போடும் அலை நுரையும்
கரை வந்த நண்டுகளும்
ஏதோ கிறுக்க
அதிகாலை மாலைப் பொழுதுகள்
கடல் நீரில் முகம் கழுவி
வாழும் வாழ்வில்
எல்லாமே
பொய்யாகிப் போனதில்லை
உப்புக் கசக்கும்
கடல் அள்ளிக் குடித்து
முள்ளுக் குத்தும்
மீன் பிடித்து தின்று
வாழ்ந்த வாழ்வு
இனியும் வாழும்





நான் உனக்கு எழுதிய
கடிதத்தை கிழித்துவிட்டால்
நீ நினைத்ததை எழுதியிருக்கிறேன்
என்பது தெரிகிறது.
நான் உனக்கு எழுதிய
கடிதத்தை வாசித்துவிட்டால்
நீ நினைக்காததை எழுதியிருக்கிறேன்
என்பது தெரிகிறது.
ஆகவே
நான் உனக்கு எழுதும்
எல்லா கடிதங்களையும்
கிழித்துவிடேன்.




அழிவுகளைத் தந்தாலும்
நீ வரவேண்டும்
என்று நாம் நினைக்கிறோம்.
அழிவுகளைக் கொடுக்கிறோம்
என்று நீ நினைப்பாயா?
நாம் வழி விடவா?
அல்லது நீ எமக்கு
வழிவிடுவாயா?



யார் யாரோ
வந்து அமர்ந்து செல்கிறார்கள்.
எல்லோரின் மனதிலேயும்
அவரவர் தம் தத்தமது
எதிர்காலம்.

நடந்து நடந்து
கால் பாதம் தேய்ந்து
ரேகையில்லாமல்
அழிந்துவிடுகிறது.
பாதை மட்டும் அழியாமல்
புதியவர்களுக்கும்
வழிவிடுகிறது.
காய்ந்த மரச்செடி
முள் நிறைந்த பற்றைகள்
வண்ணத்துப்பூச்சி
இங்கே ஆயுள் தேடுகிறது.
முள்களுக்கூடான வாழ்க்கை
பழக்கப்பட்டிருக்கும் போது
முள்ளும்
இங்கே தோற்றுப் போகிறது





படையினரின் கட்டுப்பாட்டில்
துன்ப நிகழ்வுகள்
அரங்கேறுகிறபோது
எத்தனை முறைகள்
சுட்டிக்காட்டுவது?
முறையிடுவது?



அழகாக
உருவான அபாயங்கள்
விளைவாகவுள்ள போதும்
தெரியாமல்
படர்கின்ற கிளிக்கூட்டம்
வலையில்
சிக்கித் தவிக்கும்.
நிலை பாராமல்
தடயங்கள் தெரிந்தும்
பச்சை மிளகாயை
கிளி கொண்டு போகுதே.



எழுந்து நிற்க முயற்சிக்கும்
சிறுசுகள்
தரையில் முகம் புதைத்து
உரசிப் பார்க்கிறார்கள்.
முகம் இருந்தும்
முகவரி இல்லாத எம்மை
முகவரி இருந்தும்
முகம் இல்லாதவர்கள்
பார்த்துப் போகிறார்கள்.



பக்கத்தூரில்
கூடுதலாகப் பெய்கிறது என்று,
எமது ஊரில்
அன்றைய தினம் பெய்ய மறுக்கும்
மழைக்கு,
கொஞ்சம் கூட மனமில்லை என்று
சொல்லும் எமது மனதுக்கு,
எனது ஊரினை
தொடர்ந்து நனைக்கின்றபோது
மழை பிடிக்காமல்
கொஞ்சம் கூட மனமில்லை
மழைக்கென்று சொல்லுகின்ற
எனது மனதுக்கு,
எதைத்தான் நிரந்தரமாக பிடிக்கிறது?



நீயும் நானும் இருக்கும்
தனியார் வகுப்பறையில்
பாடம் படித்து முடிந்தும்
எல்லோரும் வெளியேறியும்
நான் மட்டும் தனிய
எழுந்திருக்க மனமில்லாமல்
அமர்ந்திருக்கிறேன்.
மீண்டும் ஒரு தடவை வந்து
அமர்ந்து விட்டுப் போயேன்.




ஓடும் வெள்ளத்தில் நின்று கொண்டு
வெள்ளத்தைப் பார்க்கின்றபோது,
என்னை இழுத்துக்கொண்டு
செல்வதுபோல், எனது பார்வையை
பிரமிக்க வைக்கும் வெள்ளத்தில்
மீண்டும் மீண்டும் நிற்க
விரும்புகின்றபோதும்
எந்தவித வசதியுமின்றி
மீளக்குடியமர்ந்த
கூடாரத்துக்குள் நீ வருவதால்
வெள்ளத்தில் நிற்க விருப்பமில்லை.

உனது அடையாளங்களைப்
பார்த்து
அந்த இடத்தில் நீ இருப்பாய்
என்று
உறுதிசெய்ய வாய்த்திருக்கும்
தெளிவான பார்வை
எமக்குள்.






**கோ**டு போடமுடிந்த
கரும்பலகையில்
அழிக்கமுடியாத சொற்கள்
நிறைய இருக்கின்றன.
இதற்குள்
எத்தனையாம் இடத்தில்
உனது எனது பெயர்கள்.





மண் பெற்ற
தாயின் மடி
சாய்கிறோம்.
தாயின் மூச்சு
மண்ணின் சுவாசம்
நுகருகின்றோம்.



கரை தேடி
கடல் தொட்ட
மீனவன் வலைக்குள்
சிக்காமல்
விடுபடும் உப்புக் காற்று
தொட்டுத் தொட்டு
நழுவி விலகி
ஆர்ப்பரிக்கும் அலை.
உப்புக் காற்றில்
முழுமையடைந்து
கரையைத் தொடும்
சுவாசம்.

ஒருவரும் ஒப்பிடமுடியாத
வெற்றிடத்தில்
ஒவ்வொருவரும்
அழகானவர்கள்.
நீ ஏறும் பேருந்தில்
எத்தனை தடவைகள்
இறங்கியது எனது பார்வை.




என்னை
உனக்குப் பிடிக்கும் என்று
எனக்குள்ளே
நினைத்துக் கொள்கிறேன்.
உன்னை
எனக்குப் பிடிக்கும் என்று
உனக்குள்ளே
நினைத்துக்கொள்வாயா?



நாளுக்கு நாள் நடந்தேறும்
சம்பவங்களால்
ரணமாகிப் போன
எனது உடலில்
மகிழ்விக்கக்கூடிய
நிகழ்வொன்றில்
ஈடுபடுத்த முடியாமல்
தள்ளி நிற்கிறது.



வெள்ளத்தில் இறங்க
மனமில்லாதவரகள்
வீட்டுக்குள் இருந்துகொண்டு
மழை பிடிக்கிறது என்று
பொய் சொல்கிறார்கள்.
ஜன்னல் ஊடே
கையை வெளியே விட்டு
மழைத்துளிகளைத்
தட்டிப் பார்க்கின்ற ஆனந்தம் இருந்தும்,
வீட்டுக்கு வெளியே வந்து
கறுத்தக் குடை கொண்டு
மறுக்க மனம் எப்படி முடிகிறது.




அறிமுகமில்லாத நண்பர்களோடு
என்னைப்
பார்த்தபடியே கதைப்பாய்.
உன்னை மட்டும்
அறிமுகப்படுத்திக் கொண்ட
என்னோடு மட்டும்
பலரையும் பார்த்தபடியே கதைப்பாய்.



இரண்டும் இல்லாத சூழலில்
செயற்பாடுகள்.
நாம் கூப்பிடுகின்றபோது
நீ வரவில்லை.
நாம் கூப்பிடாதபோது
நீ வருகிறாய்.
உனக்கும் எமக்கும்
என்ன வித்தியாசம்?



நீ எனது வீட்டுக்குள் வந்து
என்னைத் தூங்கவிடாமல்
நனைக்கின்றபோதும்.
உன்னை வெறுப்பது
உனக்கே தெரியாமல்
போய்விடுகின்றபோதுதான்
ஊரையே சிலவேளைகளில்
அழித்து விடுகிறாய் போலும்.
மழைக்கால நாட்குறிப்பேட்டில்
ஒரே மாதிரி எழுதி.
சொற்களைப்
புரிந்துகொள்ள முடியாமலும்
உடனேயே அழித்தும் விடுகிறாய்.



நல்லூர்த் திருவிழாவில்
சாமி வெளிவீதி
வரும்போது தான்
நீயும்
வெளியே வருகிறாய்.
அதனால்
வெளி வீதியில் நிற்கும்
நான் ஒருபோதும்
சாமியைப் பார்த்ததில்லை.

வெள்ளை
இரண்டு மாடு பூட்டி
செம்பாட்டு ஒழுங்கையினூடே
மட்டுமல்லாமல்
பிரதான வீதியிலேயும்
தன்னுடைய எருவினை
பாரம் தூக்கிச் செல்கிறது.
நெடுந்தூரம்
கால் எடுத்து வைக்க
ஞாபகம் ஊட்டுகிறது
கம்மாலைக்காரன்
காலில் பதித்த ஆணி.





பிரிந்து செல்லமுடியா
வகுப்பறையாக
தனிப்பட்ட இருப்பிடமில்லா
அமர்வுகளாக
காதல் கதை பேசி
என்னை நீயும்
உன்னை நானும்
ஏமாற்றிச் செல்கிறோம்.



எத்தனை காலங்கள் இடைவெளிவிட்டு
குறுகிய இரண்டு மாதங்கள்
பெய்யும் மழைக்கு
மனசு இருக்கிறது.
ஆனால் நீண்ட காலங்கள்
காய்ந்து குறுகிய காலங்கள்
பெய்யும் மழையில்
நனைய மனமில்லை.



அணிவகுத்து நின்ற
நாள்களில்
கைகொடுத்த உறவுகள்
அணிகுலைந்த பின்
கைவிட்டு விட்டதே.
புனர்வாழ்வளிக்கப்பட்டு
விட்டதாக
கூறும் அரசு
எம்மை
புலம்பெயர வைக்கிறது.



எனது வீட்டில் ஒரு அறை
உனக்காக ஒதுங்கியது.
நான் இருந்த நாள்களில்
கவிதையானது அறை.
எல்லோரையும் அனுமதித்திருக்கிறேன்.
உன்னைத் தவிர
ஏனெனில்
நீ இல்லாதபோது
அழகாய் இருக்கிறது.



மழை நாள்களில்
வீட்டில் இருந்து கூட
வீதியை எட்டிப்பார்க்காத
உனக்கு
நான் அவ்வீதியூடே
நனைந்துபோவது மட்டும்
எப்படித் தெரியும்.



**வா**சிக்க வேண்டிய
நிறைய விடயம்
ஒரு புத்தகத்தில்
இருவரின் பதிவுகள் உள்ள
ஒரு பக்கம்.



கார்த்திகையில் ஒவ்வொரு நாள்
மழையில் நனையும்போதும்
எத்தனை கார்த்திகைகள்
நினைவில் வரும்
வந்து பாடாய்ப்படுத்தும்.
ஒவ்வொரு மழைத் துளியும்
உடலில் விழுந்து
முள்ளாய் குத்தி இரத்தத்தை
வெளியே எடுக்கப் பார்க்கிறது.



முகாம் வாழ்வின் நாட்குறிப்பேட்டில்
விழி சொரியும் பக்கங்கள் ஒவ்வொன்றும்
நனைந்து நனைந்து ஈரப்பட்டு
மென்மையாகிப் போய்
உலர்த்திவிட முடியாத அளவில்
ரணப்பட்டிருக்கிறது.



மழைத்துளி விழுந்து தெறிக்கும்
சிதறல்களில் கலங்கும் வெள்ளத்தில்
எனது முகம் பார்க்கிறேன்
துண்டு துண்டாக
உடைந்துவிட்டதுபோல்
காண்பித்து,
மீண்டும் உடையாதது போல்
காண்பிக்கும்
மழை வெள்ளத்தின்
ஏமாற்றுப் புத்தியில்
எங்களது புத்தியும்
ஒன்றாக இருக்கிறது.



உனக்கு எதிர்ப்புக் காட்டி
குடை பிடித்துச் செல்பவர்களை
அடையாளம் காட்டாமலும்.
உன்னை பிடித்தோ பிடிக்காமலோ
நனைந்து செல்பவர்களை
இனங்காட்டி விடுகிறாய்.
ஆரவாரப்பட்டு நீ வருவதற்கான
அடையாளத்தை காட்டிவிட்டு
வந்துசேரும் மழையே
நீ சொல்லாமல் கொள்ளாமல்
சென்றுவிடுவது
ஏனோ தெரியவில்லை.



பாதுகாப்பான சமூகத்தில்
எழுத்து மிதவாதம் கொள்ளாது
மிதவாதம் உள்ள சமூகத்தில்
எழுத்துக்கு
பாதுகாப்பு கிடையாது.
ஆடு மட்டும் ஆடிச்செல்ல
இது மேடையல்ல
ஒவ்வொரு கால் பாதங்களையும்
பதிய வைக்கும் ஈழமண்.



எதுவும் தானாக வரும்போது
இயல்பாகப் பார்ப்பவர்களுக்கும்.
கேட்கும்போது மட்டும்
உயர்வாக நினைப்பவர்களுக்கும்
மழை பிடிக்காது.
எந்த இடமானாலும் ஒரே மாதிரியாக
பெய்யும் மழைக்கு மட்டும்
தெரியவில்லை போலும்
பிடிக்காதவர்களும் இருக்கிறார்கள் என்று.




துரோகத்தனங்களும்
போர் வரைமுறைக்கு
மீறிய செயல்களும்
நியாயத்தை
குழிதோண்டிப்
புதைத்தன.
நாங்கள்
வாழ்ந்த இடங்கள்
பயன்படுத்திய
போர்த்தளபாடங்கள்
பார்வைக்காக விடப்பட்டுள்ளன.
எங்களைப் பார்க்க
ஒருவரும் இல்லை.



நெருடல்களில்
அகப்பட்டுக்கொண்டு
மீட்கமுடியாமல் இருக்கிற
பகுதியில்
சிறைக்கூடமாக
நீ உள்ளே நான் வெளியே
என்று இருவரும் அடையாளப்படும்
வேடிக்கையான
கண்ணாடி வாழ்வு.
ஒவ்வொரு நாளும்
பூமரம் பூக்களை உதிர்த்தாலும்
அந்த ஒரு நாள்
தன் மரண முடிவிலும்
சந்தோஷப்படுத்துவது போலும்
கண்ணாடி வாழ்வு உடைந்தாலும்
முகம் காட்டி நிற்கிறது.

வீண்போகாத செயற்பாடுகள்
எல்லோரையும்
அடையாளப்படுத்த
தவறியதில்லை.
வீணான முயற்சியாக
யாரையும்
அடையாளப்படுத்த
முடியவில்லை.





அவளிடம்
அப்படி என்னதான்
இருக்கிறது
என்று கேட்டவர்கள்
அவளைப் பார்த்ததும்
என்னிடம் என்ன இருக்கிறது
என்று கேட்கிறார்கள்.




மழையில் நனைந்து
சளி பிடித்து ஈரலிப்பாகின்ற
வரை
உன்னில் நனைந்து
ஈரலிப்பாகிறது எனது மனம்.
உன்னை ஞாபகப்படுத்த
என்னை நனைக்கத்தான்
உன்னால் முடிகிறது.



செயற்பாடுகள்
எனக்கானதென்று
இருக்காமல்
எல்லோருக்குமானதென்று
விட்டுக் கொடுத்தால்
மனிதத்தன்மை
பிறந்துவிடுகிறது.



முன்னுக்கு
சென்றுவிடவேண்டும்!
களைக்காமல்
நடக்கிற வாழ்வில்
எம்மில் குறையாமல்
இருப்பது ஆசை.
எதிர்பார்ப்பது கிடைக்காமல்
எதிர்பார்க்க முடியாமல்
சந்தித்து விடுகிற எதுவும்
பயனுள்ளதாகுமென்று
நினைக்காததால் தான்
கிடைக்காததை தேடுகின்றோம்



**கா**தலில்
வேண்டப்படாதவர் போலவும்
பழகும் நட்பில்
வேண்டப்படுபவர் போலவும்
வெளிப்படையாக
இருக்கிறபோதும்
உள்ளளவில்
யாரும் வந்து போகலாம்.



சுமையாக
உயிர் உடலில் இருக்கிறது.
நினைவுகளாக
உடல் உயிரில் இருக்கிறது.
அடையாளப்பட்டு இருக்கிற
இடத்தில் அல்ல
அடைபட்டு இருக்கிற
இடத்தில்
கைதுகள், காணாமல் போதல்.




வெளியே வரமுடியாத
பார்வைக்கு மட்டும்
இன்னும் வெளிச்சம் தெரியவில்லை.
நாலா பக்கமும்
இருள் வந்து மூடும் அறை.
யன்னல் திறக்கும் மட்டும்
ஒளிச் சாரல் எங்கே போகும்.
முட்டி மோதி
மூடியிருக்கும் சுவரினை மட்டும்
சூடேற்றும்.
நாமாகத் திறந்தால் மட்டுமே
முடிகிறது.
ஆனாலும்
அதன் உட்புறச் சுவரில்
சூடு தெரிகிறது.



எனது எதிர்பார்ப்பில்
எதனை
எதனையெல்லாம்
எதிர்பார்க்காமல்,
நடந்துவிடுகிற நிகழ்வுகளுக்குள்
பெருத்து
வீங்கி விடுகிற காற்றுப்பையாக
ஊதும் மட்டும்
சம்பவங்கள் பல இருக்கின்றன.
காற்று வெளியில்
பறந்து செல்லும்
இலகுவான பலூன் போலத்தான்
இடைக்கிடை
நிலை எடுக்க முடியாமல்
இன்னொரு உந்துதலுக்குள்
அகப்பட்டு
எதுவும் முடியாமல்
போய்விடுகிறது




செம்பாட்டு மண்ணின்
மழைக்காலக் குழைவும்
வெயில்கால இறுக்கமும்
கொண்ட
ஒழுங்கைகள் எல்லாம்
நடந்து செல்லத்தான்
அனுமதிக்கின்றன.
சின்னஞ்சிறுசுகளின் நீச்சலில்
மெதுவாகச் செல்லும்
வாய்க்கால் தண்ணீர்
அழுக்கினைப் போக்கி
இருக்கிற மணலில்
குடிசைகள் சுவர் எழுப்பும்.




பருவத்தின் காலம் இது
பரிணாமம்
வெவ்வேறுபட்ட அனுபவம்
இன்பத்தின் வேராகப் பரவி
கிளைகளில்
வெளிப்படும் பூ போல
உறவாகிறோம்.

நிலங்களுக்குக் கூடப்
பிரிகின்ற சோகம் இங்கில்லை.
வீட்டு கதவு தொடக்கம்
யன்னல் வரை
அடைபடுகின்ற
தனிப்பட்ட வாழ்வும்
இங்கில்லை
இயற்கையுடன்
ஒட்டி வாழ்கின்ற மனசும்
கனவுகள்
இல்லாத இதயங்களும்
குடிகொண்டிருக்கின்ற
இந்த ஊருக்குள்
வெறுங்கையுடன் தான்
செல்லவேண்டும்.





போர்க்களத்தில்
என்னைப் பயன்படுத்தியதால்
நீ வீரனானாய்
வீரன்
என்னைப் பயன்படுத்தியதால்
போர்க்களமானது.
நிராயுதபாணிகளையும்
அப்பாவிகளையும்
சுடுவதற்காக
நான் பிறக்கவில்லை.
உன்னைச் சுடுபவனை
எதிர்த்துச் சுடுவதற்காக
நான் பிறந்தேன்.



உனக்கான இருப்பிடம்
ஓடிச் சேரும்போது
கொஞ்சம்கூட தேங்க விடாமல்
போய்ச் சேர்ந்துவிடுவாய் - ஆனாலும்
சில இடங்களிலிருந்து
உன்னை நீயே கொண்டுசெல்ல
முடியாமல்தான் உள்ளது
அந்த வானம் ஏற்படுத்திய உணர்வை
கடைசித் துளியில் கூட
உணர்ந்து கொள்கிறது
எனது உடல்.



தோளில் சுமந்த
நினைவுகள் தான்
இறக்கிவைத்த பின்னும்
வருகிறது.
வாழ்ந்ததுக்கான
இருப்பிடம் இல்லை
இறந்ததுக்கான
அடையாளமும் இல்லை.
முள்ளிவாய்க்காலில்
எல்லோரையும்
புதைத்திருக்கலாம்.



ஒவ்வொருவரும்
ஒவ்வொருவிதமாக
எதிர்பார்ப்பதால்தான்
ஒருவனுக்கு ஒருத்தியை
மட்டும் பிடிக்கிறது.
இது தெரியாமலா
வேறுயாரையும்
பார் என்றாய்.



சூடாக நெருப்புக்கும்
குளிராகத் தண்ணீருக்கும்
மட்டுமல்ல,
உசுப்பேத்தி தலையில் குட்டி
நரம்புக்கும்
தமிழ்
தொற்றிக்கொண்டிருக்கின்றது.
விடைபெற்றுப் போக முடியாத
வரவேற்பு மண்டபத்தில்
உட்புகுந்து எல்லாப் பக்கமும்
அமர்ந்து
விரிவுரை
நடத்திக்கொண்டிருக்கிறது.



அங்கம் அங்கமாக
ஏறிக்கொண்டிருக்கும்
அழுத்தங்களில்
பெருகிப்போன நிகழ்வுகள்
கணக்கெடுக்க முடியாது
கூடிக்கிடக்கிறது.




வெவ்வேறுபட்ட இடங்களின
மாறுபட்ட சந்திகளூடேயும்
தெருக்கள்
ஊர்ப்போய்ச் சேருகிறது போல
ஒவ்வொருவருக்குள்ளும்
ஒன்றான சிந்தனைகளில்
அறியப்படாது
நடைமுறைகள் மாறுபட்டதாக
நினைக்கிறது மனசு.
வேகம். தடை இரண்டும்
சேர்ந்தால்தான்
ஒரு நிகழ்வாக அமைகிறது.



வேலைத்தள வாசலில்
கால் துடைக்கப் போட்டிருந்த
துணிமேல்
“வெல்கம்” என்று எழுதியிருந்தது.
உள்ளே சென்று
திரும்பி வரும்போது
தலைகீழாகத் தெரிந்தது
எழுத்தல்ல.

பாதையில்
நாங்களாக வழி தவறுகின்ற
போதுதான்
எல்லோரும் நடக்கமுடிகிறது.
ஒவ்வொருவரும் செல்கின்ற
பாதை
ஒன்றாக இருக்கிறது.
பிரிந்து சென்றாலும்
பயணத்துக்கு இடையூறாக
என்றுமே இருந்ததில்லை.




ஐந்து நிமிட
சந்திப்புக்காக
அநியாயமாக கழியும்
ஒரு நாள்.

குறுக்கே கடல்
சேர்ந்து விடும்
இக்கரையும் அக்கரையும்.
அடிக்கடி
கரையைத் தேடும்
ஈரப்படுத்துவதற்காக
காயப்போட்ட வலை.
படகேறிப் போகையில்
மறைந்த கரையை
நினைத்து
தெரிந்த கரையை
பார்க்க முடியவில்லை.



தனிமைப்பட்டு
யாரையும் அறிமுகப்படுத்தாமல்
ஒருமித்து
எல்லோரையும் தெரியப்படுத்திய
காதல் வாழ்கிறது.



எத்தனை முறை
கரையைத் தொட்டிருக்கும்
படகு
விண்மீன்களும் நிலவும்
சூரியன் வரமுதல்
கடலில் பாதை அமைக்கும்.
உயிர்களை
பறிக்க பறிக்க
வீழ்ந்து விடாமல்
கடலில் நங்கூரமிட்டது.





எஜமான்
இரக்கம் இல்லாதவன்
அவனின் பெயரில்
மடியில் சூடு
காயப்பட்டு செத்தாலும்
இதற்கு மட்டும் வீரம்.
காளை அடக்கும் போட்டி.
தவிடும் புண்ணாக்கும்
சாப்பிட்டு
குடம் நிறைய தண்ணீர்
குடித்தும் கட்டுக்குள்.



உன்னையும் என்னையும்
வேறுபடுத்த முடியாமல்
நிறைவையும் குறைவையும்
எதிர்கொண்டு
பழகிய வகுப்பறை.



மழைக்காலம்
சூடு தேடி வந்து
எரியும் விளக்கினை
கூட்டமாகச் சுற்றி
சிறகினை
உதிர்த்து விட்டுப் போகும்
ஈசல் போல
அடிக்கடி எனது மனதை
பல இடங்களில்
தொலைத்ததும் உண்டு.

# அன்புக் குறிப்புகள்



ஈழ மண்ணின்
சூழலை
நங்கூரமிட்ட கட்டு மரத்தில்
படிப்பவர்களைப் போல
செல்வத்திடம்
உணர்ந்தேன் நான்!

கவிஞர். அறிவுமதி
சென்னை.

ISBN 978-955-41299-0-0

Noble Printers, Jaffna, Sri Lanka (+94) 021 222 0386